# 32. சிலப்பதிகார காலம் வரையில் தமிழில் இசைப்பாடல்கள்

திருமதி கிருபாசக்தி கருணா
சிரேஷ்ட விரிவுரையாளர், தலைவர்,
முனைவர் பட்ட ஆய்வாளர். *(Bridge Academy, Chennai)*
இசைத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**கலை**

கலைச் சிறப்பில்லாத காலகட்டம் மனிதனின் மங்கிய வரலாறாகக் காணப்படுகிறது. ஒரு சமுதாயத்திலுள்ள மனித நாகரிகத்தின் சிறப்பையும் பண்பாட்டுத் தன்மைகளையும் கலைகளைக் கொண்டு அறியலாம்; கலைகளைப் பற்றி விளக்கம் தரும் டி.வி. நாராயணசாமி கலை என்பது மக்களது வாழ்வியலை, பண்பாட்டை, நாகரிகத்தை எடுத்துக் காட்டும் கண்ணாடி என்று எடுத்துக் காட்டுகின்றார். மக்கள் வாழ வளர சமுதாய நீதிகளையும் அறத் தத்துவங்களையும் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டிட கலைகளைப் போல் வேறு சாதனமில்லை" என்றும் கூறுகின்றார். இவ்வாறன கலைகள் அறுபத்து நான்காகப் பகுக்கப்பட்டுள்ளன. இவற்றுள் இசைக்கலை சிறப்புடைய கலைகளுல் ஒன்றாக கருதப்படுகிறது.

**இசைக் கலை**

ஒலியின் அடிப்படையில் அமைவது இசைக்கலை. இசைக்கு விளக்கம் தரும் ச.வே சுப்பரமணியன் பின்வருமாறு கூறுகிறார். செவி வழிப்புகுந்து இதய நாடிகளைத் தடவி உயிரினங்களை இசையவும் பொருந்தவும் வைக்கின்ற பொழுது இசை ஒலிகள் இசை என்ற பெயரைப் பெறுகின்றன.

தொடக்க காலத்தில் தமிழர் இசை இலக்கணம், இலக்கியம் என்ற இரண்டு பாகுபாடுகளைக் கொண்டிருந்தது. பஞ்சமரபு என்ற இசைத் தமிழ் நூலும் கூத்தநூல் என்ற நாடகத் தமிழ் நூலும் இன்று தமிழிசையில் இலக்கண நூலாகக் கிடைக்கப் பெற்றுள்ளன. இவற்றை விட இயற்றமிழ் நூல்களான தொல் காப்பியம், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை ஆகியவற்றிலுள்ள இசைக் குறிப்புகளும் இளங்கோவடிகளின் சிலப்பதிகாரத்திலுள்ள இசைச் செய்திகளும் நிகண்டு நூல்களும் இசைத் தமிழி;ன் இலக்கணக் கருவூலங்களாகத் திகழ்கின்றன.

மேற்கூறிய நூல்களில் காணப்படும் இலக்கணங்களுக்கெல்லாம் ஆதார இலக்கியங்களாக திகழ்பவை பரிபாடல், கலித்தொகை ஆகிய சங்ககால இலக்கியங்களில் காணப்படும் இசைப் பாடல்களே ஆகும். இவ் வரிசையில் சிலப்பதிகாரம் முதலான இலக்கியங்களும் பக்தி இலக்கியங்களான தேவாரம், திவ்விய பிரபந்தம், திருப்புகள் பாடல்களும் அடங்கும்.

இங்கு என்னுடைய தலைப்பு 'சிலப்பதிகார காலம் வரையில் தமிழில் இசைப்பாடல்கள்" ஆக உள்ளதால் சிலப்பதிகார காலம் வரையுள்ள தமிழிலுள்ள இசைப் பாடல் அமைப்புக்களைப் பற்றிப்பார்க்கலாம்.

**தொல்காப்பியம் கூறும் இசைப்பாடல்கள்**

ஆரம்ப காலத்தில் மக்கள் குழுக்களாக வாழ்ந்ததால் காலப் போக்கில் இயற்கையின் நிகழ்ச்சிகளோடு தொடர்புடைய

சடங்குகளைச் செய்ய ஆரம்பித்தனர். அதாவது பயிர் செழிக்க, வேட்டை சிறக்க, மழை கிடைக்க, துன்பம் நீங்க எனப் பல வேண்டுதல்களை வேண்டி சடங்குகளைச் செய்யும் போது ஆடிப்பாடினர். ஆடிப் பாடுதலுடன் இணைத்து தம் வேண்டுதல்களை நிறைவேற்றுவதன் ஊடாக அச்செயல் வெற்றியடையும் என நம்பினர். இவ்வாறான ஆடிப்பாடுதலுடன். இணைந்து நம்பிக்கையின் அடிப்படையில் ஆரம்பித்த கலைகள் தொல்காப்பிய காலத்தில் "வெறியாட்டு", "உண்டாட்டு" போன்ற கூட்டாகச் சேர்ந்த ஆடல் பாடலால் வளரத் தொடங்கின. காலப் போக்கில் ஆடலும் பாடலும் தனித்தன்மை பெற்று உருப்பெறத் தொடங்கின.

தொல்காப்பியம் பல்வேறு இசைப் பாடல் வகைகளை விளக்குகிறது. தொல்காப்பிய காலத்திற்கு முன்னர் பல வகையான வண்ணங்கள் கவிப்பாடல்கள், பரிபாடல், தேவபாணி, தரவு, தாழிசைகள், வெண்பா, ஆசிரியம், பண்ணத்தி முதலிய இசைப்பாடல்கள் வழக்கிலிருந்தன. இவற்றையொட்டி தொல்காப்பியரும் பாடல்களின் அமைப்பு முறையைக் கொண்டும் பாடல்களின் கருத்தை அடிப்படையாகக் கொண்டும் அவற்றின் இசைத் தன்மையை அடிப்படையாகக் கொண்டும் சில வகைப் பாடல்களைப் பாகுபாடு செய்துள்ளார். அவற்றுள் இசைத் தன்மை பொருந்திய பாடல்வகைகளாகப் பரிபாடல், பண்ணத்தி ஆகியன சிறப்பிடம் பெறுகின்றன.

பாடல் என்பது பண்ணோடு கூடியது. காதுக்கினிய ஓசை அமையப் பாடுவது பாடல் இது கவிப்பா, பரிபாடல் அமைப்பில் இருக்கும். பரிபாடல் என்பது பரிந்த பாடல் எனப் பொருள்படும் என்பதை,

**"நாடகவழக்கினும் உலகியல் வழக்கினும்**

**பாடல் சான்ற புலநெறி வழக்கம்**

**கலியே பரிபாட்டு ஆயிரு பாங்கினும்**

**உரியதாகும் என்மனார் புலவர்"**

எனும் அஃதிணையியலிலுள்ள 28ம் நூற்பா புலப்படுத்துகிறது.

முறையாகப் பண் வகுக்கப்பட்ட பாடல்கள் பற்றித் தொல்காப்பியம் கூறவில்லை ஆயினும், பாணர்கள், பாடும்முறை, பாடல்வகை இலக்கணம், பாடுவோர் தம்செயல், இசைக்கருவிகள், அக்கருவிகளின் தேவை, ஆகியன பற்றித் தெளிவாகக் கூறப் பட்டுள்ளது. இதனால் இசை தொல்காப்பியம் தொட்டு தனிச் சிறப்புடன் வளர்ந்துள்ளது எனத் திட்டவட்டமாகக் கூறலாம்.

**சங்ககாலத்து இசைப்பாடல் வகைகள்**

சங்ககாலத்தில் இசைப்பாடல்கள் சிறப்பான முறையில் பாடப்பெற்று வந்துள்ளன. பாணர், பாடினி, ஆடல் மகளிர் போன்றோர் பாடல்களைப் பாடி இசைத்துள்ளனர். இசைப் பாடல்கள் ஆண்களுக்கு உரியவை, பெண்களுக்கு உரியவை, இருபாலாருக்கும் உரியவை என மூன்று வகையால் பிரிக்கப்பட்டுள்ளன. மன்னரும் மக்களும் பாடல்களை விரும்பிக் கேட்டுள்ளனர். இப்பாடல்கள் பண்ணும் தாளமும் இசைந்து காணப்படுகிறது.

இன்று கிடைத்துள்ள சங்கப் பாடல்களில் பரிபாடலும் கலித்தொகையும் இசையமைப்புடன் காணப்படுகின்றன. கலித் தொகைப் பாடல்கள் நாடக அமைப்புடன் இசை மாற்றிப் பாடுவதற்கு ஏற்ற நிலையில் காணப்படுகின்றன. கலிப்பாடலை விடவும் பரிபாடல் இசையமைப்புக்கு நன்கு பொருந்தியுள்ளதால் பரிபாடலைப் பற்றி நோக்கலாம்.

**பரிபாடல்**

சங்க இலக்கியத்தில் பரிபாடல் என்பது எட்டுத் தொகை நூல்களில் ஒன்றாக இடம் பெற்றுள்ளது. தெய்வத்தை வாழ்த்துதல், காமப் பொருள் ஆகிய பொருள்களைக் கொண்டு சங்க இலக்கியத்திலுள்ள பரிபாடல்கள் பாடப்பெற்றுள்ளன. இப்பாடல்களுக்கு இசை வகுத்தவர்களின் பெயர்களும் அதற்குரிய பண்ணும் பரிபாடலில் தரப்பட்டுள்ளது.

தனியாக இயற்கையின் இசைக் கூறுகளைக் கூறுவதோடு அமையாமல்,

அவற்றைச் செயற்கை இசையமைப்புக்களுடன் பொருத்திச் சில உண்மைகளை உய்த்தறியும் வாய்ப்பைப் பின்வரும் பரிபாடல் கூறுகிறது.

**"ஒரு திறம், பாணர் யாழின் தீங்குரலெழ**
**ஒரு திறம், யாணர் வண்டின் இமிரிசையெழ**
**ஒரு திறம், கண்ணார் குரலின் கனரபு எழ**
**ஒரு திறம், பண்ணார் தும்பி பரந்திசையூத**
**ஒரு திறம், மண்ணார் முழவின் இசையெழ**
**ஒரு திறம், அண்ணல் நெடுநீர் அருவிநீறிர் ததும்ப**
**ஒரு திறம், பாடல் நல்விறலியர் ஒல்குபுநுடங்க**
**ஒரு திறம், வாடையுள வயிற் பூங்கொடி நுடங்க**
**ஒரு திறம், பாடினி முரலும் பாவையங் குரலின்**
**நீடுகிளர் கிளமை நிறை குறை தோன்ற**
**ஒரு திறம், ஆடு சீர் மஞ்ஞை அரிகுரல் தோன்ற**
**மாறு மாறுற்றன போல்; மாறெதிர் கோடல்**
**மாறட்டான் குற்றம் உடைத்து"** (பரி. 17:9-21)

இசைத்தன்மை இப்பாடல்களில் சிறப்பாக இருந்தமையால் தான் இத்தனைபேர் அப்பாடலுக்கு இசையமைத்துள்ளனர். இப்பாடல்களில் சில திருமாலையும் செவ்வேளையும் போற்றியும், சில வைகை ஆற்றின் சிறப்பைப் போற்றியும் அகப் பொருள் சுவையுடன் இன்ப வாழ்வைப் பறை சாற்றுகின்றன.

**சங்கப் பாடல்களில் இசைப் பாடல் குறிப்புகள்**

சங்க இலக்கியத்தில் பல்வேறு சந்தர்ப்பங்களில் பல விதமான இசைப் பாடல்கள் பாடியதற்கான குறிப்புகள் காணப்படுகின்றன.

**அரச அவைப் பாடல்கள்**

பொருநராற்றுப் படையில் திருமாவளவனின் பெருமையைக் குறிப்பிடும் புலவர் முடத்தாமக் கண்ணியார் அவனுடைய அவையில் இசைப்பாடல் பெருமையாகப் பாடப் பெற்றமையை கீழ் வரும் பாடல் மூலம் காணலாம்.

**"முரசு முழங்கு தானை மூவரும் கூடி**
**அரசவை இருந்த தோற்றம் போலப்**
**பாடல் பற்றிய பயனுடைய எழாஅல்**
**கோடியர் தலைவ கொண்ட தறிந"**

(பொரு 54-57)

அரசவையில் இசைப்பாடலுக்குக் கொடுக்கப்பட்ட சிறப்பான இடம் இப்பாடல் வகையால் புலப்படுகிறது.

**அகவன் மகளிர் பாடல்**

குறி சொல்லப்பாடும் இயல்புடைய அகவன் மகளிர் பற்றிப் புலவர் பாணர் குறிப்பிடும் பாடல் குறுந்தொகையில் இடம்பெற்றுள்ளது. புலவர் ஔவையார் அகவன் மகளிர் பற்றிப் பாடுவதைப் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

**"அகவன் மகளே பாடுக பாட்டே**
**இன்னும் பாடுக பாட்டே அவர்**
**நன் னெடும் குன்றம் பாடிய பாட்டே"**

(குறுந் 23 3-.5)

அகவன் மகளிர் தலைவிக்குக் குறி சொல்லும்போது தலைவனின் மலையைப் பெருமைப்படுத்திப் பாடுகின்ற அந்தப் பாட்டை மேலும் மேலும் கேட்க ஆசைப்பட்ட தலைவி அவளைத் திரும்பத்திரும்ப பாடுமாறு கேட்கிறாள்.

இவ்வகை அகவன் மகளிர் பாடலின் வளர்ச்சியாகக் குறவஞ்சிப் பாடல்களைக் கருதலாம். இவ்வகைப் பாடல்கள் இலக்கியத் தரத்தில் மிக்கவையும் இசைத் தன்மையில் குன்றாதவையாகவும் வளர்ந்துள்ளமை சிறப்பாகும்.

**மறையோர் பாடல்**

மறையோர்களால் இறைவனை வேண்டிப்பாடும் இறைவணக்கப் பாடலாகும். இறையருள் பெறுவது மட்டுமே இப்பாடல்களின் நோக்கம். எ-டு

**"நாறெழுந் தடக்கிய அருமறைக் கேள்வி**
**நாவியன் மருங்கின் நவிலப் பாடி"**

(திருமு 186 - 187)

**உழிஞைப் பாடல்**

வெற்றி பெற்ற மன்னர் மனம் மகிழ பெண்கள் பாடுவதாகும் எதிகளைப் புறங் காட்டச் செய்த மன்னனைப் புகழந்து

பாடுவது உழிஞைப் பாட்டாகக் கூறப்படுகிறது. இப்பாடல்கள் பேரியாழுடன் இசைத்துப் . பாலைப் பண்ணில் பாடப் படுவதாகப் பின்வரும் பாடல் கூறுகிறது.

**"வண்டு படு கூந்தன் முடிபுனை மகளிர்**

**தொடைபடு பேரியாழ் பாலை பண்ணிப்**

**பணியா மரபினுழிஞை பாட**

**இனிது புறந் தந்தவர்க் கின் மகிழ் சுரத்தலின்"**

(பதிற் 46: 4-7)

**விறற்களப் பாடல்**

போர்க்களத்தில் நடந்த வீரப் போரை சிறப்பித்து வெற்றி வாகை சூடிய மன்னரைப் புகழ்ந்து பாடும் பாடல் இது ஆகும். மன்னரைப் பாடுவது போன்று முருகனையும் சிறப்பித்துப் பாடும் பாடல் மரபும் இருந்துள்ளது.எ-டு

**"சீர்திகழ் சிலம்பகஞ் சிலம்பப் பாடிச்**

**சூரர மகளிர் ஆடும்சோலை"** (திரு. 40-41)

இவற்றைவிட வேலன் வெறியாட்டலுடன் தொடர்புடைய வெறியாட்டப் பாடலும், சங்ககாலக் கூத்துவகைகளின் ஒன்றாகிய துணங்கைக் கூத்தின் போது பாடப்படும் துணைங்கைப் பாடல் பற்றியும், ஆடல் மகளிர் அமர்ந்து பாடுகின்ற ஆடல் மகளிர் பாடல் பற்றியும், உலக்கை கொண்டு நெல் அல்லது தினை குத்தும் போது பெண்கள் பாடும் வள்ளைப்பாட்டு பற்றியும் சங்ககாலப் பாடல் மிகச்சிறப்பாகக் காட்டுகிறது.

**சிலப்பதிகார இசைப்பாடல்கள்**

தமிழ் இலக்கியத்தில் "இசைப் பாடல்கள்" எனும் தகுதியைப் பெறுவனவற்றுள் சிலப்பதிகாரப் பாடல்கள் முக்கிய இடம் வகிக்கின்றன. சங்க காலப் பாடல்களை விட சிலப்பதிகாரப் பாடல்கள் இசைக்கும் தன்மை கூடியனவாக இரப்பினும், செயல் முறை வழக்கிலோ அரங்க இசையிலோ பாடப்படும் வழக்கம் அரிதாகவே உள்ளது. ஆனால், இசைப்பாடல்கள் என்ற ரீதியில் முனைவர் இ. அங்கயற்கண்ணியின் "சிலப்பதிகாரத்தில் காணப்படும் இசைப்பாடல்கள்" என்ற நூலும், டாக்டர் எஸ்.சீதா, டாக்டர் எஸ்.இராமநாதன், குடந்தை ப.சுந்தரேசனார் ஆகிய இசை ஆய்வாளர்களின் இசையமைப்புக்களும், சில இசைக் கலைஞர்களின் இசையமைப்புக்களும் இவ் ஆய்வுக்கு ஒரு அடிப்படையாக வைக்கப் பட்டுள்ளது.

சிலப்பதிகாரத்து மங்கல வாழ்த்து, மனையறம் படுத்த காதை, கானல் வரி, வேட்டுவவரி, ஆய்ச்சியர் குரவை, குன்றக் குரவை, வாழ்த்துக்காதை முதலிய பகுதிகளிலுள்ள பல பாடல்கள் இசைப்பதற்கு ஏற்றவையாகக் காணப்படுகின்றன. (இதற்கு ஆதாரமாக சில பாடல்கள் தேர்ந்தெடுக்கப் பட்டு ஆய்வாளரால் இசைத்துக் காட்டப் படுகிறது)

**முடிவுரை**

சங்கப் பாடல்களும், சிலப்பதிகாரப் பாடல்களும் தேவார காலத்திற்கு முற்பட்ட இசைமரபை நமக்கு உணர்த்துகின்றன. இக்காலப் பாடல்களுக்கான இசைமரபு ஒன்று இருந்திருக்கின்றது என்பது தெளிவாகத் தெரிகின்றது அன்றி, இதற்கான மூல இசை வடிவம் கிடைக்க வாய்ப்பில்லை, ஆகையால் இப்பாடல் இசைக்கலைஞர்களின் கற்பனைக்கேற்றவாறு இசையமைக்கப் படலாம். இவ்வகையான இலக்கியத் தரம் வாய்ந்த தமிழ்ப் பாடல்கள் இசை அரங்குகளிலும், இசை நாட்டிய அரங்குகளிலும் இடம்பெறுவதற்கு, இசைத் தமிழ் ஆர்வலர்களும் கலைஞர்களும் முன்வர வேண்டும்.

**துணைநூற்பட்டியல்**

1. நாராயணசாமி. டி. வி, 1980, கலையும் மொழியும், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், சென்னை.
2. சுப்பிரமணியன். ச. வே, 1980, (முன்னுரை) தமிழர் தோற்கருவிகள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
3. பெருமாள்.ஏ.என், 1984, தமிழர் இசை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடு, சென்னை.